DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

Calender	Case No. : CC 19/2024 (Old cc 424/12)
Deposition of witness for	Prosecution : LW 7 – PW 7
	Defence :
	Court :
Name : சின்னதுரை	Father's Name: தீர்த்தமலை
	Husband Name:
Village : அனுகுமலை	Taluk :
	Calling :
	Age : 46

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09.02.2026

1 முதல் 6 **எதிரிகள் ஆஜரில்லை குவிமுச 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

சாட்சியின் அடையாளம் வேட்டவலம் காவல் நிலைய தலைமைக் காவலர் திரு. ரத்தினவேல் அவர்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

முதல் விசாரணை :

நான் தற்போது சென்னையில் பணிபுரிந்து கொத்தனார் வேலை செய்து குடும்பத்துடன் அனுகுமலை கிராமத்தில் வருகிறேன். சாமிவேல் என் மாமனார் ஆவார் அவரை அடித்த சங்கதிகள் எனக்கு தெரியாது. கடந்த 2014ம் வருடம் ஒரு நாள் தேதி மாதம் ஞாபகமில்ல அன்றைய தினம் சாமிவேல் வீட்டருகே நான் சென்று சாமிவேலை பார்த்தபோது சாமிவேலின் இரத்தகரை இருந்தது போலிசார் வந்து வரைபடம் வரைந்தார்கள் அப்போது நான் அங்கு இருந்தேன். அதன் பின்னர்

சாமிவேலை திருவண்ணாமலை அரசு மருத்துமனைக்கு சென்று சேர்த்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பத்தை நான் தான் போட்டேன் அது **அசாஆ4** ஆகும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான் அது **அசாஆ5** ஆகும். அந்த கையொப்பத்தை எதற்கு போட்டேன் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

(அரசுத்தரப்பு சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியமாக பாவிக்க கேட்டு அனுமதி அளித்ததின் பேரில் அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)

கடந்த 06.05.2014ம் தேதி 4.30 மணிக்கு சாமிவேல் வீட்டின் அருகே வேட்டவலம் காவல் உதவி ஆய்வாளர் வந்து வரைபடம் வரைந்து பார்வை மகசரில் கையொப்பம் பெற்றும் அதன் பின்னர் எனது முன்பும் கார்த்திகேயன் என்பவர் முன்பும் சம்பவயிடம் அருகே இருந்த பாறைகற்கள் முள்புதருகளில் தடி ஒன்று கிடந்ததாகவும் அதை போலிசார் கைப்பற்றிதாகவும் அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது கைபற்றுதல் மகசரில் உள்ள சங்கதிகள் ஏதும் தெரியாது என்று தற்போது எனக்கே தெரிந்த காரணத்தினால் ஊரில் சமாதானம் ஆகிவிட்ட காரணத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் ஆன நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் அதில் உள்ள வாசகங்களை எனக்க படித்து

காண்பித்தார்களா என்றால் படித்து காண்பிக்கவில்லை. மேற்படி கையெழுத்துக்களை அரசு மருத்துமனையில் தான் போலிசார் என்னிடம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்